உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
077 120 9996
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

சுடர் : 41
கதிர் : 206

சனிக்கிழமை
20 ஜூன் 2026

ஆனி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## சா/த பெறுபேறு நேற்றிரவு வெளியானது

கொழும்பு, ஜூன்,20
கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியாகின.
சாதாரணதரப் பரீட்சைப் பெறு »12

1999 இல் செம்மணியில்

# மீட்கப்பட்ட என்புக்கூடுகளுக்கு என்ன நடந்ததென்று தெரியாது!

கைவிரித்தார் நீதியமைச்சர்



யாழ்ப்பாணம், ஜூன் 20

செம்மணிப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டு 1999 இல் முதன்முதலாக அகழப்பட்டபோது, மீட்கப்பட்ட 15 என்புக்கூடுகளுக்கும் அந்த வழக்குக்கும் என்ன நடந்தது என்பது குறித்து எந்தவிதமான தகவல்களோ, ஆதாரங்களோ, ஆவணங்களோ எம்மிடமில்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார. »11




## நீதி இல்லாத நாட்டில் நீதியமைச்சர் எதற்கு?

செம்மணியில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20
"நீதி இல்லாத நாட்டில் நீதியமைச்சர் எதற்கு?" எனும் கோஷத்துடன் யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் »11

செம்மணி மனிதப்புதைகுழி;

## 3 மனித எலும்புக்கூடுகள் நேற்று அகழ்ந்தெடுப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணம், செம்மணி மனிதப்புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் அகழ்வாராய்ச்சிப் பணிகளின் போது, நேற்றும் 3 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், புதிதாக மேலும் 7 »11

## அரசியலமைப்பை உருவாக்க முன்னுரிமை வழங்கவில்லை!

ஒப்புக்கொள்கிறார் பிரதமர்



கொழும்பு, ஜூன் 20
"புதிய அரசியலமைப்பை இயற்றும் விடயத்திற்குத் தற்போது முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்பதை ஏற்கின்றோம். ஆனாலும், புதிய அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும் என்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது" என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். »11

## வீதியைக் கடந்த இளைஞர் வாகனம் மோதிச் சாவு!



யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்ணைப் பகுதியில், சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை விபத்தில் சிக்கிப் பரிதாபமாக உயிரி »11

## நெடுந்தீவு மீனவரின் சடலம் தமிழகத்தில் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
நெடுந்தீவில் இருந்து மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றவர், தமிழகத்தின் நாகபட்டினம் கடற்கரையோரத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது, குறித்த மீனவர் கடந்த »12

அவதூறு பரப்பக்கூடாது!

## அர்ச்சுனா எம்.பி.க்கு நீதிமன்றம் 'குட்டு'!



யாழ்ப்பாணம், ஜூன் 20
'தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு மருத்துவருக்கு எதிராக இனிமேல் எவ்விதமான அவதூறுகள், போலிப்பரப்புரைகள் என்பவற்றை சமூக ஊடகங்களிலோ அல்லது பொது வெளியிலோ முன்னெடுக்கக் கூடாது' என நடாளுமன்ற உறுப் »10

## நாகர்கோவில் காட்டில் திடீரெனத் தீப்பரவல்!

யாழ்ப்பாணம், ஜூன் 20
வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் - குடாரப்பு ஆகிய பகுதிகளுக்கு இடைப் பட்ட புனையடி காட்டுப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு திடீர் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.
குறித்த பகுதியின் பிரதான வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரம் வரையான காட்டுப் பிரதேசம் - இவ்வாறு தீப்பற்றி எரிந்து »10

கொழும்பிலுள்ள

## நீதிமன்றுக்கு நேரில் சென்றே கோத்தா நிகழ்நிலைச் சாட்சியம்!

யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை

யாழ்ப்பாணம், ஜூன் 20
யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகிய இருவர் தொடர்பிலான »12

இலங்கை அரச மருத்துவமனைகளில் முதன்முறையாக

## கிளிநொச்சி பொதுமருத்துவமனையில் செயற்கை முறை கருக்கட்டல் சிகிச்சை!

நேற்றுமுதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூன் 20
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை வரலாற்றில் முதல் தடவையாகவும், தற்போது இலங்கையிலுள்ள அரச மருத்துவமனைகளில் கிளிநொச்சியில் மாத்திரமே கிடைக்கக்கூடிய துமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செயற்கை முறை கருக்கட் »10

## மதவாச்சி – தலைமன்னார் பரீட்சார்த்த ரயில் சேவை!

மன்னார், ஜூன் 20
மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரையிலான புகையிரதப் பாதையின் சீரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, அந்தப் பாதையூடாக பரீட்சார்த்த புகையிரதச் சேவை நேற்று வெள்ளிக்கிழமை மதியம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.
கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட கடுமையான »10

முச்சந்தி முரளி

"இதை மாதிரி எல்லா ஆதாரங்களையும் இல்லையெண்டுதான் கடைசியில கைவிரிக்கப் போயினம் கண்டியளோ"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4465 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 09 16 27 57 |
| விசே. எழுத்து | B |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1532 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 33 40 41 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0491 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 3 3 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2571 |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 32 52 65 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6223 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 0 5 0 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2253 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 24 33 56 73 |
| விசேட எழுத்து | U |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.06.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0339 |
| வெற்றி இலக்கினம் | விருட்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 16 21 |

# திருத்தியமைக்கப்படவுள்ள மருந்துகளின் விலைகள்!

**கொழும்பு, ஜுன் 20**

**நாட்டில் புழக்கத்திலுள்ள 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலைகள் திருத்தியமைக்கப்படவுள்ளன என்று தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அறிவித்துள்ளது.**

அமெரிக்க டொலரின் மதிப்பு அதிகரித்துள்ளமையைக் கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரசபையின் தலைவர், விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

டொலரின் மதிப்பு உயர்வால் ஏற்பட்டுள்ள சந்தை மாற்றங்கள் காரணமாக, இந்த விலை திருத்தத்தின் கீழ் சில அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் அதிகரிக்கக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த 60 வகையான மருந்துகளின் அதிகபட்ச சில்லறைவிலைகளை வரையறுக்கும் வர்த்தமானி அறிவித்தல், இதற்கு முன்னர் கடந்த 2023ஆம் ஆண்டிலேயே இறுதியாகத் திருத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகளை விட அதிக விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்களைக் கண்டறிவதற்காக நாடளாவிய ரீதியில் விசேட சோதனைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அதிகாரசபையின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை மீறி நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் மருந்தகங்களுக்கு எதிராகத் தராதரமின்றி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | 0931 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| H | 0 3 7 9 3 8 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3197 | E | 06 07 39 48 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| U | 32 48 53 76 | 5358 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1027 | 22 28 40 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | |
| கும்பம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 07 30 47 57 | 4909 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 29 | 55 56 68 74 | 2373 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 19.06.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| R | 10 41 72 73 | 3023 |

## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு புதிய கைபேசிச் செயலி அறிமுகம்

கொழும்பு, ஜுன் 20

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர்ந்த இலங்கையர்கள், தாங்கள் எதிர்கொள்ளும் பணித்தளச் சிக்கல்கள் மற்றும் அவசரப் பிரச்சினைகளை மிக விரைவாகவும் எளிமையாகவும் சமர்ப்பிப்பதற்காக 'லங்காகனெக்ட்' எனும் புதிய அதிநவீன கையடக்கத் தொலைபேசிச் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு நடைபெற்றது. இந்த முறைப்பாட்டு முகாமைத்துவச் செயலி, உலகளாவிய ரீதியில் வாழும் அனைத்து இலங்கையர்களின் தூதரகப் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்யும் நோக்கில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலியை ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் பயன்படுத்த முடியும். புலம்பெயர் தொழிலாளர்கள் தங்களது பணிபுரியும் இடங்களில் எதிர்கொள்ளும் சம்பளப் பிரச்சினைகள், அச்சுறுத்தல்கள் அல்லது சிக்கல்களை இந்தச் செயலி மூலம் நேரடியாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு அனுப்பலாம். தாங்கள் சமர்ப்பித்த முறைப்பாடு தற்பொழுது எந்தக் கட்டத்தில் உள்ளது, அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை என்ன போன்ற விவரங்களை செயலி ஊடாகவே உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம். 'LankaConnect' செயலியை ஆண்ட்ராய்டு மற்றும் ஐபோன் பாவனையாளர்கள் முற்றிலும் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## 28 ஆக உயர்ந்துள்ள டெங்கு மரணங்கள்!

கொழும்பு, ஜுன் 20

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்வடைந்துள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 44 ஆயிரத்து 480 ஆகப் பதிவாகியுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். அதேவேளை, நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் 5ஆம் நாளான நேற்று அரச மற்றும் தனியார் அலுவலகங்களைச் சோதனையிடும் நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வருடத்தில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில், பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக, அதிகளவிலான டெங்கு நுளம்புப் பெருக்க அவதானம் மிக்க பிரிவாக அரச நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே, வளாகங்களைச் சுத்தமாகப் பேணுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-இ)



## கொழும்புத் துறைமுகத்தில் சர்வதேச கவனம் குவிப்பு

கொழும்பு, ஜுன் 20

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தற்பொழுது நிலவி வரும் தீவிரமான போர்ச்சூழல் காரணமாக, சர்வதேசக் கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், உலகளாவிய கவனம் தற்பொழுது கொழும்புத் துறைமுகத்தின் பக்கம் திரும்பியுள்ளதாக உலக வங்கிப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட முகாமையாளர் கெவோர்க் சர்க்ஸியன் தலைமையிலான உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவுக்கும், துறைமுகம், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் எரிசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக்கவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று அமைச்சின் வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது கொழும்புத் துறைமுகத்தின் ஒட்டுமொத்த உட்கட்டமைப்பை சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்துவது குறித்து உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து விசேட கூட்டு ஆய்வு ஒன்றினை முன்னெடுத்து வருவதாக வதிவிட முகாமையாளர் கெவோர்க் சர்க்ஸியன் குறிப்பிட்டார்.

தற்பொழுது நிலவி வரும் தீவிரமான போர்ச்சூழல் காரணமாக, சர்வதேசக் கப்பல் போக்குவரத்துப் பாதைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், உலகளாவிய கவனம் தற்பொழுது கொழும்புத் துறைமுகத்தின் பக்கம் திரும்பியுள்ளதாக உலக வங்கிப் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் துறைமுகத்தின் வருவாயை அதிகரிக்கத் திட்டமிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தடைகளால் தடைப்படாது!

## அமைச்சர் சுனில் தெரிவிப்பு

**கொழும்பு, ஜீன் 20**

**எத்தடை வரினும் உயிர்த்த ஞாயிறு விசாரணை நிறுத்தப்படமாட்டாது. மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் விசாரணை இடம்பெறும் என்று சட்டம், ஒழுங்கு பிரதி அமைச்சர் சுனில் வட்கல தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வங்குரோத்தடைந்துள்ள எதிரணிகள், அரசியல் நடத்துவதற்குரிய காரணிகளைத் தேடி அலைகின்றன. அண்மையில் கூடாரம் அமைத்து நாடகம் நடத்தப்பட்டது. ஆனால் மக்கள் மத்தியில் இருந்து கிளம்பிய எதிர்ப்பால் எதிரணிகள் பின்வாங் கின.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை இடம்பெற்றுவருகின்றது. இந்தவிசாரணையின் பிரகாரமே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்படும் என நாம் மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம். இதனை நாம் நிச்சயம் செய்வோம் -என்றார். (ச-44)

# ஜனாதிபதியுடன் பனிப்போர் என்பது வெறும் கட்டுக்கதை!

## பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தனக்கும் இடையில் பனிப்போர் நிலவுவதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நிராகரித்துள்ளார். தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தேசிய மக்கள் சக்திக்கும், ஜே.வி.பி.க்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக கதைகள் கூறப்பட்டுவருகின்றன. இது எதிரணிகளின் எதிர்பார்ப்பாகும். ஆனால் உண்மை அதுவல்ல.

தேசிய மக்கள் சக்தியாக நாம் ஒற்றுமையாகச் செயற்பட்டு வருகின்றோம். தேசிய மக்கள் சக்திக்குள்தான் ஜே.வி.பி.யும் இருக்கின்றது. ஜனாதிபதிக்கும், எனக்கும் இடையில் பனிப்போர் எனவும் கூறுகின்றனர். எனக்கு ஆதரவாக குழுவொன்று உள்ளது எனவும் கூறப்படுகின்றது. எதிரணிகள் வங்குரோத்து அடைந்துவிட்டன என்பதற்கு இப்படியான கட்டுக்கதை பரவல் சிறந்த சான்றாகும் - என்றார். (ச-44)

# தலைமறைவாகியுள்ளோர் மீது சர்வதேச சிவப்பு அறிவிப்புக்கள்!

கொழும்பு, ஜீன் 20

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பாதாள உலகக் குழுத் தலைவர்களை நாட்டுக்குத் திரும்ப அழைத்து வர இன்டர்போல் அமைப்பின் நீல அல்லது சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்படும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், முன்னாள் அமைச்சர்களோ அல்லது பாதாள உலகக் குழுக்களோ யாராக இருந்தாலும், நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் ஒவ்வொரு பிடியாணை தொடர்பாகப் பொலிஸ் சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்றார். பல முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக ஏற்கனவே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர், அந்த வழக்குகளிலும் இதே சட்ட நடைமுறைகளே பின்பற்றப்படும் எனக் குறிப்பிட்டார். சந்தேகநபர்களை நாட்டுக்குள் கொண்டு வருவதை உறுதி செய்வதற்காக, தேவையான இடங்களில் சர்வதேச ஒத்துழைப்பை அரசாங்கம் நாடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)



# ஐ.எம்.எப். கடனை வட்டியுடன் அடைக்கப்போவதும் மக்களே!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 20

சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து பெறப்படும் கடன்களை 5 வீதம் முதல் 6 வீதம் வரையான வட்டியுடன் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ளதால், அதன் ஒட்டுமொத்தப் பாரமும் சாதாரண மக்கள் மீதே சுமத்தப்படுகிறது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வறுமை 24.5 வீதமாக அதிகரித்துள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், மக்கள் தொகையில் நான்கில் ஒருவர் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவு மூலம் இடம்பெற்ற நிதி மோசடியின் நட்டம், மின்சாரக் கட்டணம் என்ற பெயரில் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டினார். (எ-இ)

# வாகனங்களின் விலைகளை அதிகரிக்கச் சாத்தியமில்லை!

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 20

மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் விலைகளை அதிகரிப்பதற்கு எவ்வித சாத்தியக்கூறுகளும் இல்லை என்று நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அந்நியச் செலாவணி கையிருப்பு மற்றும் ரூபா மதிப்பு மீதான அழுத்தத்தைக் குறைக்கவே வாகன இறக்குமதி மீது தற்காலிக கூடுதல் கட்டணம் விதிக்கப்பட்டதே தவிர, இறக்குமதிகள் தடை செய்யப்படவில்லை என அவர் விளக்கமளித்தார். மே மாதம் 15 ஆம் திகதி மட்டும் 23.71 மில்லியன் டொலர் பெறுமதியான 1,782 வாகனங்களுக்காக 380 கடன் கடிதங்கள் திறக்கப்பட்டுள்ளன. எனப் பிரதிஅமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)




# இதுக்குத்தானோ ஆசைப்பட்டனியள்?

'வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும்' எண்டு சொல்லுவினம். பிள்ளையள் சின்னனில என்னத்தைப் பழகுகினமோ அதுதான் வளர்ந்த பிறகும் அவையில தாக்கம் செலுத்தும். அதால தான் சின்னனிலையே பிள்ளையளுக்கு நல்ல பழக்கங்களையும், பின்னுக்கு எப்பிடி வாழோனும் எண்ட வழியளையும் பெரியாக்கள் சொல்லிக் குடுக்கிறவை. அப்பிடிச் சொல்லிக் குடுக்கேக்க நாங்கள் பிழையாச் சொல்லிக்குடுத்தால் பிள்ளையும் பிழையாத்தான் வளரும். பிறகு 'இப்பத்தை இளம்பெடி, பெட்டையள் போற போக்கைப் பார்த்தால் பயமாயிருக்குது. நாங்கள் எப்பிடி இருந்தம்.ஆனால் உதுகள் பிஞ்சிலேயே பழுத்தமாதிரி வேலையள் எல்லோ செய்யுதுகள்'எண்டு குறைப்பட்டு ஒரு பிரியோசனமுமில்லை.

கிட்டடியில செயற்பட்டு மகிழ்வோம் எண்ட, சின்னப் பிள்ளையளுக்கான விளையாட்டுப்போட்டி வடக்கு மாகாண மட்டத்தில நடந்தது. அதில கரியாலை நாகபடுவானில இருந்து வந்த பள்ளிக்கூடப் பிள்ளையள் தங்கட முழுத்திறமையையும் காட்டி, எல்லாரையும் அசரவைச்சு அப்பிடியே சம்பியனாகிட்டினம். ஒரு சின்னப்பள்ளிக்கூடம், அதுவும் வசதியள் குறைஞ்ச இடத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடப் பிள்ளையள் இப்பிடி மாகாண மட்டத்தில முதலிடம் பிடிக்கிறதெல்லாம் லேசுப்பட்ட வேலையில்லை. அதுக்குப் பின்னால அந்த விளையாட்டுக்களைப் பழக்கின ரீச்சர்மார், பிரின்சிப்பல், பள்ளிக்கூட நலன்விரும்பியள், பழைய மாணவர்மார் எண்டு கனபேர் இருப்பினம். அவை சொன்னபடி கேட்டு, எந்தப் பெரிய ரவுணில இருந்து எவ்வளவு வசதியளோட இருக்கிற பள்ளிக்கூடம் வந்தாலும் அவையை வெண்டுகாட்டுவம் எண்ட ஓர்மத்தோட நேரகாலம் பாராமல் இந்த விளையாட்டை தவமா பழகி, எல்லாரையும் ஒருக்கா திரும்பிப் பாக்கவைக்கிற அளவுக்கு சம்பியனான அந்தப் பிள்ளையளுக்கு இந்த வெற்றி இன்னும் வாழ்க்கையில உச்சத்துக்குப் போறதுக்கு உந்துசக்தியா இருக்கும். எந்தப் பெரிய கொம்பன் வந்தாலும் எங்களை அசைக்க ஏலாது எண்ட உறுதியோட போராடி, நினைச்சபடி வாகை சூடின அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் பட்சியின்ர பாராட்டுகள்.

இந்த இடத்தில இன்னொரு விசயத்தையும் சொல்ல வேண்டி இருக்கு. வெற்றி வரேக்க அதுக்கேத்தபடி அதைக் கொண்டாடவும் பழகவேணும். வெற்றியை அடுத்தவையின்ர மனம் நோகமாலும், எங்கட சந்தோசத்தை வெளிப்படுத்திற மாதிரியும் கொண்டாடேக்க, அந்தக் கொண்டாட்டம் பிள்ளையளுக்கு ஏத்ததாவும் இருக்கோணும். உந்த செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில வெண்ட பிள்ளையளை சம்பியன் கப்போட பஸ்ஸில இருந்து றோட்டில இறக்கி 'ஒரே ஒரு ராத்திரிக்கி வச்சேன் கச்சேரி உலகம் முழுக்க பத்திக்கிச்சி விட்டேன் சவாரி' எண்டொரு அருவருப்பான , ரட்டை அர்த்தம் கொண்ட ஆபாசக் குத்துப் பாட்டுக்கு ஆட வைச்சு வீடியோ எடுத்து சோசல் மீடியாக்களில போட்டிருக்கினம். அந்தப் பிள்ளையள் கஷ்டப்பட்டு வெண்டுவந்த பேர், புகழ் எல்லாம் இந்த ஒற்றைக் குத்தாட்டத்தோட 'குளோஸ்'. வெண்ட பிள்ளையள் இயல்பா ஏதும் கோசம் போட்டு, ஆடி தங்கட வெற்றிச் சந்தோசத்தை வெளிப்படுத்த விடுங்கோவன். எதுக்கு இப்பிடி பிஞ்சிலையே விசத்தை திணிச்சு பிள்ளையளை இப்பவே ரீல்ஸ் மோகத்துக்குள்ள தள்ளுறீங்கள்? அதைவிட அங்க ஆடாம நிக்கிற பொம்பிளைப்பிள்ளையளையும் வீடியோ எடுத்த நாதாரியொண்டு ஆடுங்கோ ஆடுங்கோ எண்டு பலவந்தப்படுத்துது. இதையெல்லாம் முளையிலே கிள்ளாட்டி நாளைக்கு இன்னும் மோசமாவும் சொல்லிக்குடுப்பினம். பள்ளிக்கூட நிர்வாகமும், வலயமும், மாகாணமும் இதைப்பற்றி ஒரு இறுக்கமான நடவடிக்கை எடுக்கிறதுதான் பிள்ளையளின்ர எதிர்காலத்துக்கு நல்லது கண்டியளோ!

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கேள்வி அறிவித்தல்
## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்
## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.
03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும். கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5 மில்லியனுக்கும் அதிகமான பணிகளுக்கான கேள்விதாரர்கள். 1987-ஆம் ஆண்டின் 03-ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின்படி. இலங்கை பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். கேள்வி ஆவணத்துடன் PCA03 சான்றிதழ் இணைக்க வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் Bidding Data, Contract Data, மற்றும் Schedule இல் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்'** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்** என்னும் முகவரியில் **2026.06.22 ஆம் திகதியிலிருந்து 2026.07.06** ஆம் திகதி வரை **அலுவலக நாட்களில்** மு.ப **9.00 தொடக்கம்** பி.ப **03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 01,02 இற்கு ரூபா. 6,000.00** உம் தொடர் இலக்கம் 03 தொடக்கம் 12 இற்கு **ரூபா. 3,000.00** (வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு 2026.07.07 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை** என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியிலோ அல்லது நல்லூர் பிரதேச சபையிலோ செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2026.06.30ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு. ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரரர்கள் அல்லது கேள்விதாரர் சார்பில் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| **Document Issuing/Purchasing Period** | **From 2026.06.22 - 2026.07.06** |
| **Pre – Bid Conference** | **At 10.00 A.M On 2026.06.30** |
| **Closing and Opening of Bid** | **At 10.30A.M on 2026.07.07** |

| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/2026/CF- II/ Head Office | Extension of Office Building at Nallur Pradeshiya Sabha | 13.11 | 119 Days | C7 ,C6 and C5 (Building) | 77 Days | 197,000.00 | 2026.10.19 |
| 2. | NPS/2026/CF-II / Con.Shoulder | Construction of Concrete Shoulder for Council Roads at Nallur Pradeshiya Sabha. | 16.66 | 91 Days | C7 ,C6 and C5 (Highway) | 77 Days | 250,000.00 | 2026.10.19 |
| 3. | NPS/2026/CF-II / Kok.Library | Repair Works of Kokuvil Public Library | 5.96 | 91 Days | C8,C7 and C6 (Building) | 77 Days | 90,000.00 | 2026.10.19 |
| 4. | NPS/2026/CF-II / Nal.Library | Repair Works of Nallur Public Library | 2.83 | 91 Days | C9,C8 and C7 (Building) | 49 Days | 43,000.00 | 2026.09.21 |
| 5. | NPS/2026/CF-II / Drainage | Construction of Drainage Channel in Pulavanar Veethy, Kalviyankadu. | 3.67 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 56,000.00 | 2026.09.21 |
| 6. | NPS/2026/CF-II / Pac 01 | Renovation of Roads, Package – 01 (Manchathady Road & Manchathady Road By lane) | 4.90 | 91 Days | C8,C7 and C6 (Highway) | 49 Days | 74,000.00 | 2026.09.21 |
| 7. | NPS/2026/CF-II / Pac-02 | Renovation of Roads, Package – 02 (Puvanewary Amman Road, 5th Cross Lane Paatpannai Road, Kulamkarai Road 8th Lane, Kerniyadi Veethy Ariyalai East) | 3.61 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 55,000.00 | 2026.09.21 |
| 8. | NPS/2026/CF-II / Pac - 03 | Renovation of Roads, Package – 03 (Maniyakara Road by lane , Kalasalai Road 3rd lane, Kaladdy 2nd Road By Lane) | 4.42 | 84 Days | C8,C7 and C6 (Highway) | 49 Days | 67,000.00 | 2026.09.21 |
| 9. | NPS/2026/CF-II / Pac - 04 | Renovation of Roads, Package – 04 (Veerapathirar Road 2nd Lane, Narayanan Road 2nd Lane, Valaka Veethy 6th Lane, Potpathy German Store Near Road) | 3.67 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 55,000.00 | 2026.09.21 |
| 10. | NPS/2026/CF-II / Con.Sho.Kaladdy Munthal | Construction of Concrete Shoulder at Kaladdy Munthal Road | 6.79 | 84 Days | C8,C7 and C6 (Highway) | 77 Days | 102,000.00 | 2026.10.19 |
| 11. | NPS/2026/CF-II / Poncity Road | Improvements of Poncity Roads (Balance Work) | 3.53 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 53,000.00 | 2026.09.21 |
| 12. | NPS/2026/CF-II/ Cemetery | Improvements of Cemeteries | 2.33 | 28 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 35,000.00 | 2026.09.21 |

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.

2026.06.20

(GP/477712)J-1

# இணுவில் கந்தசுவாமி கொடியேற்றம் இன்று

வரலாற்று சிறப்பு மிக்க இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 25 நாள்கள் உற்சவம் நடைபெறும் உற்சவத்தில் எதிர்வரும் முதலாம் திகதி மஞ்சத் திருவிழாவும் ஜூலை மாதம் 13ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 14ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ச)

# குருபூசை

சைவ பரிபாலன சபை நடத்தும் மாணிக்கவாசகர் குரு பூசைதினம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சபை ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். நிர்வாகசபை உறுப்பினர் நா.நீலாம்பிகை தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பேச்சு, நடனம்,கதாப்பிரசங்கம்,நாடகம் உள்ளிட்ட கலைநிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# மட்டக்களப்பில் ஔவை விழா

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் அருகில் அமைந்துள்ள ஔவை சிலை முற்றத்தில், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணி முதல் பிரம்மாண்டமான "ஔவை விழா 2026" தமிழ்க் கலை இலக்கிய விழா நடைபெறவுள்ளது.

கதிரவன் பட்டிமன்றப் பேரவை மற்றும் ஔவை அவை ஆகியன ஒன்றிணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்க ளாக நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், ஞா. சிறிநேசன், இ. சிறிநாத், க.பிரபு, கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவம் பாக்கியநாதன் ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

விழாவுக்கு மெருகூட்டும் வகையில் தமிழ்நாட்டிலிருந்து முனைவர் S.D. கலையமுதன், டில்லி கலை இலக்கியப் பேரவை, போபால் கம்பன் கழகத்தின் செயலாளர் பன்னாட்டுப்பாவலர் பா. குமார், தென்னிந்தியப் பாடகர் ஜெய் கிருஷ் ஆகிய கலை இலக்கிய ஆளுமைகள் பங்கேற்கவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டியின் இறுதிப்போட்டி, மாவட்ட அரச அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு இடையிலான சுவாரசியமான விவாத இறுதிப்போட்டி, வில்லுப்பாட்டு, கவிதை அரங்கேற்றம் என்பன நிகழ்வை அலங்கரிக்கவுள்ளன. (ச)

பருத்தித்துறையில்

# சட்டவிரோத மணல் அகழ்வு பொதுமக்களால் முறியடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

பருத்தித்துறை - கோரியடி உல்லாசக் கடற்கரையில் இருந்து சட்டவிரோதமாக மணல் கடத்தும் முயற்சி ஊர் மக்களால் நள்ளிரவு வேளை முறியடிக்கப் பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை குறித்த பகுதியில் கும்பல் ஒன்று சட்டவிரோத மணல்அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது கடற்கரை வீதி ஊடாக பொலிஸ் ரோந்து வாகனம் சென்றுள்ளது. இதையடுத்து மணல் கடத்தலில் ஈடுபட்டவர்கள் வாகனத்தை விட்டு தப்பி ஓடினர்.அந்த சமயம் அங்கு வந்த மீனவர்கள் அவர்களை மடக்கிப்பிடித்தனர். அதனைத் தொடர்ந்து மீனவர்கள் வழங்கிய தகவலை அடுத்து கடற்றொழில் சங்கத்தினர் மற்றும் பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ்போல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தனர். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதைத்தொடர்ந்து அவர்கள் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டனர்.

சாரதி உள்ளிட்ட ஐந்து சந்தேக நபர்கள் மற்றும் கடத்தலுக்குப்பயன்படுத்தப்பட்ட 'மகேந்திரா' ரக வாகனமும் மீட்கப்பட்டு பருத்தித்துறை நகரபிதா முன்னிலையில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டது. இதுதொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# நிம்மதி நிலைக்கட்டும்!

மத்திய கிழக்கில் நீடித்துவந்த கடுமையான போர்ப்பதற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புதிய உடன்படிக்கை உலகளாவிய ரீதியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. உலகப் பொருளாதாரத்தையே உலுக்கிக் கொண்டிருந்த ஒரு பெரும் நெருக்கடி, இந்த இராஜதந்திர நகர்வின் மூலம் தற்காலிகமாகவேனும் தணிந்திருப்பது ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்துக்கு-குறிப்பாக இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு-ஒரு நிம்மதிப் பெருமூச்சை அளித்துள்ளது. இந்த உடன்பாட்டின் நேரடித் தாக்கமாக உலகச் சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை கணிசமாகச் சரிவடைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக ஏறுமுகமாகக் காணப்பட்ட எரிபொருள் விலை, தற்போது வீழ்ச்சியடையத் தொடங்கியிருப்பது உலகப் பொருளாதாரச் சமநிலையை மீண்டும் சீரமைப்பதற்கான முதற்படியாகும். அத்தோடு, சர்வதேச எரிபொருள் விநியோகத்தின் இதயமாகக் கருதப்படும் 'ஹோர்மூஸ் நீரிணை' ஊடான போக்குவரத்துப் பாதைகள் வழமைக்குத் திரும்பும் என்ற அறிவிப்பு, உலக வர்த்தகத்துறையில் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

மத்திய கிழக்கில் நிலவிய போர்ப்பதற்றத்தால் முழு உலகமுமே கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டது என்பதில் ஐயமில்லை. குறிப்பாக, ஏற்கனவே பொருளாதார நெருக்கடிகளால் தத்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கை போன்ற வளரும் நாடுகள், இந்த விநியோகத் தடங்கல்களாலும் விலை ஏற்றங்களாலும் மிகக் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகின. உள்நாட்டில் பணவீக்கம் அதிகரிப்பதற்கும், அத்தியாவசியப் பொருள்களின் விலை கட்டுக்கடங்காமல் உயர்வதற்கும் இந்த உலகளாவிய யுத்தச் சூழலே பிரதான காரணியாக அமைந்தது. இத்தகையதொரு இக்கட்டான பின்னணியில், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள போர்நிறுத்தம் இலங்கை போன்ற நாடுகளுக்குத் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும், பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுவதற்கும் ஒரு சுமுகமான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளும் எட்டியுள்ள இந்த உடன்படிக்கையை வெறும் காகித அளவிலான ஆவணமாகக் கருதாமல், அதன் உள்ளடக்கத்தை முழுமையாகப் பேணவேண்டிய மிகப்பெரிய கூட்டுப்பொறுப்பு அவ்விரு தரப்பிற்கும் உண்டு. இந்த அமைதிப்போக்கு நீடித்தால் மட்டுமே உலகப் பொருளாதாரம் நிலையான பாதையை நோக்கி நகர முடியும். போர் என்பது அழிவை மட்டுமே தரும் என்பதை உணர்ந்து, இராஜதந்திரரீதியில் எட்டப்பட்ட இந்தப் போர் நிறுத்தத்தை இரு நாடுகளும் பொறுப்புணர்வுடன் பாதுகாப்பதே உலக அமைதிக்கும் உலக மக்களின் வாழ்வாதாரத்திற்கும் செய்யும் ஆகச்சிறந்த நன்மையாகும். ஆயினும், போரினால் ஏற்பட்ட ஆழமான வடுக்களும் பொருளாதாரத் தாக்கங்களும் ஒரே நாளில் சீராகிவிடாது. சர்வதேச சந்தை நிலைவரங்கள், கப்பல் போக்குவரத்துக்கான காப்புறுதிச் செலவுகள் மற்றும் விநியோகச் சங்கிலி மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதற்கு இன்னும் சில மாதங்கள் வரை எடுக்கக்கூடும். எனவே, இந்த இடைப்பட்ட காலப் பகுதியை இலங்கை போன்ற நாடுகள் மிக அவதானமாகக் கையாளவேண்டும். தற்காலிகமாக வீழ்ச்சியடையும் எரிபொருள் விலையின் நன்மைகளை, நாட்டின் உற்பத்தித்துறைக்கும் அடித்தட்டு மக்களுக்கும் போய்சேர்க்கும் வகையிலான சரியான பொருளாதாரக் கொள்கைகளை அரசாங்கம் வகுக்க வேண்டும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு**

**பொருள்:** பிறனுடைய மனைவியை விரும்பி நோக்காத பெரிய ஆண்மை, சான்றோர்க்கு அறம் மட்டும் அன்று; நிறைந்த ஒழுக்கமுமாகும்.




# இறக்குமதிக் கொடுப்பனவுக்கு புதிய விதிகள் நடைமுறை

**கொழும்பு, ஜூன் 20**
**இறக்குமதி நடவடிக்கைகளின் போது வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகளை மிகவும் வினைத்திறனாகக் கண்காணிக்கும் நோக்கில், புதிய விதிமுறைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வெளியிட்டுள்ளார்.**

இவ்விதிமுறைகள் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

புதிய விதிமுறைகளின் கீழ், மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு இறக்குமதிக் கொடுப்பனவுக்கும் வணிக வங்கிகள் ஒரு சிறப்பு எண்ணை ஒதுக்கீடு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன், வரம்பற்ற வரி அடையாள எண் உட்பட, பரிவர்த்தனை தொடர்பான அனைத்து அத்தியாவசியத் தகவல்களையும் சுங்கத் திணைக்களத்துக்கு வங்கிகள் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். இறக்குமதியாளர்கள் பொருள்களுக்காக முற்பணம் செலுத்துவதற்கு முன்னர், இலங்கை சுங்கத்தில் தகுதிபெற்ற இறக்குமதியாளர்களாகப் பதிவு செய்திருப்பது அவசியமாகும். அவ்வாறு பதிவு செய்யப்படாத இறக்குமதியாளர்களுக்கு வணிக வங்கிகள் முற்பணம் செலுத்த அனுமதி வழங்காது எனவும் இவ்வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## நடப்பாண்டில்
# வீதி விபத்துகளால் 1,297 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 20
இந்த ஆண்டின் கடந்த ஐந்தரை மாத காலப்பகுதியில் மாத்திரம் இடம்பெற்ற வீதி விபத்துகளினால் 1,297 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் பதிவான விபத்துத் தரவுகளின் அடிப்படையிலேயே இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பொலிஸ் தலைமையகத்தின் புள்ளிவிபரங்களின்படி, இந்த விபத்துகளில் உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையானோர் பாதசாரிகளும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களுமேயாவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# வீதி விபத்தில் பெண் பலி!

கொழும்பு, ஜூன் 20
பல்லேவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்எலிய சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். கன்டெய்னர் ரக வாகனமொன்று, அதே திசையில் முன்னால் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தின் காரணமாக மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கல் எலிய பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பாக பாரவூர்தி வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், பல்லேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச-இ)

## அஹமதாபாத்—கொழும்புக்கு நேரடி விமானசேவை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 20
இந்தியாவின் அஹமதாபாத் நகருக்கும் கொழும்புக்கும் இடையிலான புதிய நேரடி விமான சேவை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இரு நகரங்களுக்கும் இடையிலான பயண நேரம் சுமார் 8 மணித்தியாலங்களிலிருந்து 3 மணித்தியாலங்களாகக் கணிசமாகக் குறையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# எல்—நினோ மாற்றத்தால் பெரும் பாதிப்புகளில்லை

*விவசாயத்திணைக்களம் தெரிவிப்பு*

எல்-நினோ காலநிலை மாற்றத்தால் இலங்கைக்குப் பெரும் பாதிப்புகள் ஏற்படாது என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி என். ஏ. ஆர். டி. விக்ரமரச்சி தெரிவித்துள்ளார்.

கண்ணொறுவாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அவர், நாட்டின் புவியியல் அமைவிடம் காரணமாகச் சற்றுக் கூடுதல் வெப்பமும் மழைவீழ்ச்சியும் நிலவலாமே தவிர, அச்சுறுத்தலான சூழல் உருவாகாது என்று குறிப்பிட்டார். (எ-இ)

**நாளை**
ஞாயிற்றுக்கிழமை-ஆனி 07
21.06.2026
சுபநேரம் : 08.54 - 10.24
ராகுகாலம் : 04.24 - 05.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


உ

## பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தானம்
## 9ம் திருவிழா உபயகாரர்களும், பழையவர் கோயில் கட்ட திருப்பணிச்சபை உறுப்பினர்களும்
## "பழையவர்" வரலாறும், வழக்குத் தீர்ப்பும் - (TR / 181 / 2019)

# அறிவித்தல்



உலகப்பெரும் சண்முகப்பெருமான் (1928 - என்றும்)



மூலவர் (1900 ம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் - இன்றும்)


பழையவர் (பழைய மூலவர்) (1658 - 1990 வரை மூலவராக (1900 - இன்றும் - பழையவராக) மேற்பெருமன்



தலவிருட்சம் வன்னி மரம்



ஆதி மூலவர் (வஜ்ர வேல் ....1658 வரை)



தீர்த்தம் - நறுநீர்க்கேணி (கற்பூரம் விளைந்த கேணி)

ஈழமணித்திருநாட்டின் ஆறுபடை வீடுகள் முருகன் ஆலயங்களில் ஒன்றானதும். "கற்பூரக்கந்தன்" என அழைக்கப்பட்ட கந்தவனக் கந்தனின் புண்ணிய ஷேத்திரம் (இந்து ஒளி ஆவணி - புரட்டாதி. 2013 - இந்துமாமன்ற வெளியீடு) அருணகிரிநாத சுவாமிகள் இவ் ஆலயத்தின் மீது "உறவுசிங்கிகள்" எனும் திருப்புகழைப்பாடி அதில் "கந்தசுவாமி கானகம்" எனும் தல முத்திரையையும் குறிப்பிட்டுள்ளார். " கந்தசுவாமி கானகம்" - கந்தவனம் இத்திருப்புகழ் இந்துசமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

தஷிணகைலாச "புராணத்தின் 9ம் அத்தியாயமானது "கந்தக்கடவுள்" மரக்கலமேறி "காங்கேயன்" துறையில் இறங்கி அருள்புரிந்து (மாவிட்டபுரம்) அங்கிருந்து மீண்டும் மரக்கலமேறி "கந்தவனத்தை" அடைந்து எழுந்தருளி - அருள்புரிந்து மீண்டும் மரக்கலமேறி "உகந்தைமலையை" அடைந்தாக. குறிப்பிடுவதுடன் இவ்வாறு கந்தப்பெருமான் ஏறிச்சென்ற மரக்கலம் உகந்தைமலைக்கு (உகந்தைமலை முருகன் ஆலயம்) அருகிலுள்ள ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு இப்பொழுதும் இம் மரக்கலம் சிலைவடிவமாகக் காணப்படுகின்றது. இவ்விடயம் தஷிணகைலாசபுராணம் அத்தியாயம் 9. பக்கம் 78 - 79 இல் குறிப்பிடப்பட்டுள்ளது (உதயன் பத்திரிகை - 18.25.07.2012. 01.08.2012) போர்த்துக்கீசரால் (1503 - 1658) நல்லூர். மாவிட்டபுரம். குமாரபுரம் (முல்லைத்தீவு) ஆகிய ஆலயங்கள் முற்றாக இடிக்கப்பட்டபோதும் பொலிகண்டி கந்தவனம் ஆலயமானது போத்துக்கீசரின் இடிப்பிலிருந்து அன்று தப்பி இருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வாறான ஆலயம் அவ்வப்போது புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டு வைரக்கல்லிற்கு (வெள்ளைப்பொழிகல்) மாற்றப்பட்டு ஒவ்வொரு திருவிழா உபயகாரர்களும். ஒவ்வொரு ஆலய திருப்பணி உபயகாரர்களாக. திருப்பணியை மேற்கொண்டமை இங்கே குறிப்பிடத்தக்கது ( மகாகும்பாபிஷேகம் 1870 ...1900...1941. 1981. 2003). அதேவேளை சிலர் குடும்பங்களாகவும் திருப்பணியை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது இந்தவகையில் "பழையவர் கோயில்" ஆனது 9 ம் திருவிழா உபயகாரர்களினால் "திருப்பணி உபயமாக" கட்டப்பட்டு அவ்வப்போது புனரமைப்பு மேற்கொண்டமையும் இங்கே குறிப்பிடத்தக்கது (கணக்கறிக்கை - வ-2 சாட்கிகள்)

கோப்பாயில் பாம்புக்கடிக்கு இலக்கான நபரை உயிர்ப்பித்த "காசிநாத பரியாரியார்" வசித்த கந்தவனப்பதி - பொலிகண்டி. 1907 ம் ஆண்டு ஆனி 11 ற்கு முற்பட்ட கந்தவன ஆதீனகர்த்தாக்களின் வழித்தோன்றல். (இந்து ஆலயங்களின் தொகுப்பு - பக்கம் 515 கலைக்கேசரி - 2013- ஆனி பக்கம் 50 -55 இந்து மாமன்ற வெளியீடு.

இவ் ஆலயத்தில் மூன்று சண்முகப்பெருமான் வீற்றிருப்பதும் அவர்களிற்கென தனித்தனி வரலாறுகளும். சிறப்புக்களும் உள்ளன. அதுமட்டுமன்றி மூவரும் இந்திரமயிலின் மீதமர்ந்த சண்முகப்பெருமான் என்பதுடன் அனைத்துப் பிரதேச மக்களின் - பக்தர்களின் தாலிக்கொடிகள் உட்பட தங்க அபரணங்கள். நிதிப்பங்களிப்பில் உருவாகிய ஐம்பொன் சண்முகப்பெருமான். "உலகப்பெரும் ஐம்பொன் சண்முகப்பெருமானாக" இங்கே உள்ளார்.

1. "பழையவர்" (1900 - இன்றும்) என அழைக்கப்படும் "பழைய மூலவர்" (1658..1900வரை) இச்சண்முகர் விக்கிரகம் சோழர் காலத்திற்குரியது. (7ம் - 9ம் நூற்றாண்டு) முத்தரச சோழமன்னன் காலத்தில் வாழ்ந்த "சிற்பமுனிவரால்" இது செதுக்கப்பட்டது - வடிக்கப்பட்டது. இவ்விக்கிரகம் சோழர் காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமாரபுரத்திலுள்ள சித்திரவோயுத சுவாமி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது.

போத்துக்கீசரால் (1503 - 1658) இவ் ஆலயம் இடிக்கப்பட்டபோது இச்சோழர்கால சண்முகர் விக்கிரகம் கடல் மார்க்கமாகக் கந்தவனம் கொண்டுவரப்பட்டு "மூலவராக" (......1900 வரை) பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வந்தது. இக்காலப்பகுதியில் (1900 - 1905) இம் மூல மூர்த்திக்கு அபிஷேகம் நடைபெறும்போது அபிஷேகக்குடம் தவறி வீழ்ந்து சண்முகப்பெருமானின் இடதுபுற வரதகரம் (வரமருளும் கரம்) ஊறடைந்தது. இதனால் இவ்விக்கிரத்தை கடலில் இடுவதற்கு எண்ணியபோது "முருகப்பெருமான் " "பக்தர்" ஒருவரின் கனவில் தோன்றி "தம்மைக் கடலில்" இடவேண்டாம் என்றும் தம்மை ஆலய உள்வீதியிலுள்ள "வன்னிமர நிழலில்" பிரதிஷ்டை செய்யுமாறும் " **கட்டளை இட** " "அவ்" "**இறை கட்டளைக்கு**" அமைய இம் மூலவர் - "பழையவர்" எனும் பெயரில் "வன்னிமர" நிழலில் சண்முகப்பெருமானை கடல் மார்க்கமாக மரக்கலத்தில் கொண்டுவந்த 9ம் திருவிழா உபயகாரர்கள் ஆகிய எம் முன்னோர்களால் வன்னிமர நிழலில்" "ஆலய உள்வீதியில்" வடக்குப்புறமாக தெற்கு நோக்கியவாறு "ஆதிமூலவராம்" - வேற்பெருமான்" (வஜ்ரவேல்) ஆலயத்திற்கு மேற்குபுறமாக அதன் அருகில் "பழையவர்" ஆலயம் எம் முன்னோர்களால் அமைக்கப்பட்டது (1900 - 1905).. பின்னர் அவ்வப்போது (1900.1941. 1981. 2003) இடம்பெற்ற புனரமைப்பு. திருப்பணிகள் எம்மாலேயே மேற்கொள்ளப்பட்டு இதற்கும் தனியாக் பழையவருக்கு யாகசாலை அமைக்கப்பட்டு (சிவசிறி- கொங்காதரக்குருக்கள் பழையவர் - யாகசாஸ சிவாச்சாரியார் - 2003 கும்பாபிஷேகம்) எமக்கும் "சங்கல்பம்" செய்யப்பட்டு "பூரணாகுதி" இடப்பட்டு. "கும்பம்" வீதிவலம் வந்து மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது (2003)) புகைப்படம் - வ 5)

2. தற்போதைய மூலவர் (.... 1900 ம் ஆண்டு முதல் - இற்றைவரை) இச்சண்முகர் விக்கிரகம் கும்பகோணத்திலிருந்து கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு 1900. 1941". 1981. 2003 இலும் மகாகும்பாபிஷேகம் இடம்பெற்றது (சிவதொண்டன் வெளியீடு ஆனி - ஆடி 2006 பக்கம். 8.9.10. எ 17)

3. உலகப்பெரும் சண்முகப்பெருமான்".. ஐம்பொன்னாலான இந்திரமயிலின் மீதமர்ந்த சண்முகப் பெருமான் இவர் அனைத்துப் பிரதேச பொதுமக்களின் - பக்தர்களின் தாலிக்கொடிகள் உட்பட தங்க ஆபரணங்கள் நிதிப்பங்களிப்பில் ஆலயத்தின் தெற்கு வாசலில் 1928ம் ஆண்டு சைவப்பெரியார் திக்கம் செல்லையாபிள்ளை அவர்களின் தலைமையில் வார்ப்பிக்கப்பட்டது. இச்சண்முகப்பெருமான் இரதோற்சவம். சூரசம்காரம் போன்றவற்றிற்கு மட்டுமே எழுந்தருளி அருள்புரிவார். (1928 - 2028 நூற்றாண்டை நோக்கிய). (சிவதொண்டன் வெளியீடு ஆனி - ஆடி 2006. பக்கம் -09)

4. ஆதிமூலவரான வேற்பெருமான் (வஜ்ரவேல்). இவர் போத்துக்கீசர் காலத்திற்கு முற்பட்டவர். இவ்வேல் ஆலயம் " பழையவர்" சந்நிதிக்கு கிழக்குப்புறமாக அமையப்பெற்றிருந்தது.

(4) போத்துக்கீசராலேயே இடிக்கப்படாதிருந்த வரலாற்றினை கொண்டிருந்ததும் வரலாற்றுப் பெருமைகளை ஆதாரத்துடன் கொன்டது வைரக்கல்லாம் வெள்ளைப் பொழிகல்லினால் அமைக்கப்பட்டிருந்ததுமான இவ் ஆலயமானது திருவிழா. திருப்பணி உபயகாரர்களின். ஆலோசனைகள் இன்றி ஆகமவிதிகளிற்கு முரணாக பிரதமகுருவின். கட்டட ஸ்தபதியின் ஆலோசனையும் பொருட்படுத்தாது .

கந்தவன ஆலயமானது புராதன திருமஞ்சனக் கிணறுகள் உட்பட அனைத்தும் ஆதீன கர்த்தாக்கள் எனக் கூறுபவர்களால் முற்றாக "பெக்கோ" இயந்திரங்கள் மூலம் இடித்தழிக்கப்பட்டது - "பழைய திருப்பணியைப் பழுதுபார்த்து திருத்துதல் பன்மடங்கு புண்ணியம் என்பது சைவ பேர் அறிஞர் இடித்து உரைத்த பென்மொழி (2ம் திருவிழா நிர்வாகசபை தலைவர் அமரர் ஆறுமுகம் அவர்களது நினைமலர்" பக்கம் 40 பிரிவு 6) இவ்வாறு இடிக்கப்பட்ட "பழையவர்" ஆலயத்தினை நாம் மீளக் கட்டுவதற்கு பிரதேச செயலாளர் - பருத்தித்துறை ஊடாக தொடர்புகொண்டபோது "தனியே திருப்பணி வேலை செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது " என அவர்கள் தெரிவித்தமை. பருத்தித்துறை பிரதேச செயலாளர் அவர்களின் 11.10.2018 ம் திகதிய Vada/N/DS/Field/-29 ம் இலக்க கடித மூலம் எமக்கு அறியத்தரப்பட்டது.

இதற்கமைவாக எம்மால் ஆதீனகர்த்தாக்கள் எனக் கூறுபவர்களுக்கு எதிராக 07.01.2019 பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

**TR/181/2019 - சாட்சிகள்**

1. திரு. நடராசா இளஞ்சந்திரன் (தலைவர்)
2. திரு. சின்னராசா சிவபாலசிங்கம் (செயலாளர்)
3. திரு. வைத்திலிங்கம் முத்துமாணிக்கம்
4. திரு. தங்கராசா [illegible]

**ஆவணங்கள்**

1. கலைக்கேசரி பக்கம் 50 - 55 வ.1
2. பழையவர் திருப்பணி மணிமண்டபம் பழையவர் கும்பாபிஷேக செலவு கள் உட்பட்ட க/கு அறிக்கை வ. 2 -(19.03.1999 - 25.04.2003)
3. கந்தவன ஆலய 9ம் திருவிழா அன்னதானசபை - கணக்கறிக்கை வ.3
4. மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா விஞ்ஞாபனம் வ . 4
5. "ஓலை மடத்தை" உள்ளடக்கிய 3692 ம் இல வெளிப்படுத்தல் உறுதி - எ.14

**எமது தரப்பு விளக்கம் 12.03.2025 முடிவுற்றது.**

**05.08.2025 வழக்கேட்டின்**

* எதிராளிகளின் சட்டத்தரணியில் வழக்காளிகளின் (எமது) சட்டத்தரணிக்கு 28.07.2025 ம் திகதிய நகர்த்தல் பத்திர கடிதம் மேற்படி வழக்கில் 3ம் எதிராளி மன்றில் சாட்சியமளிப்பதற்காக 05.08.2025 ம் திகதி நீதி மன்றத்திற்கு வருவதற்கு ஆயத்தமாக இருந்தார். திடீரென இருதய நோய் ஏற்பட்டதால் மன்றிற்கு சமூகமளிக்கமுடியவில்லை. அவருக்கு ஏற்பட்ட சுகயீன மருத்துவ சான்றிதழை மறுதவணை மன்றில் சமர்ப்பிக்கின்றோம். இவ் வழக்கு 02.09.2025 விளக்கத்திற்கு தவணைதருமாறு மன்றைக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

* எதிராளிகளின் சட்டத்தரணியால் 04.08.2025 ம் திகதி மதியம் 12.00 மணிக்கு பின்னர் மன்றில் சமர்ப்பித்த நகர்தல் பாத்திர கடிதமும் மருத்துவ அறிக்கையும்.

இத்துடன் இணைக்கப்பட்ட மருத்துவச் சான்றிதழானது வெளிநாடொன்றில் பெறப்பட்டிருந்ததுடன் **17ம் திகதி யூன் மாதம் 2021ம் ஆண்டு எனக் குறிப்பிட்டிருப்பதை 2025ம் ஆண்டு என மாற்றீடு செய்யப்பட்டிருப்பதனை மன்றினால் அவதானிக்க முடிகின்றது.** குறித்த மருத்துவச் சான்றிதழில் நோயாளியின் பெயரோ. முகவரியோ அவரைச் சார்ந்த விடயங்கள் எதுவும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. குறித்த இவ்வழக்கு இடம்பெற்ற 05.08.2025 அன்று எதிராளிகள். எதிராளிகள் சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி திருமதி வி.உருத்திரேஸ்வரன் அவர்கள் மன்றிற்கு சமூகமளிக்கவில்லை. வழக்காளிகளின் வழக்கு 12.03.2025 ம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்த நிலையில் (வழக்காளிகளின் சாட்சிகள் ஆவணங்கள் - விளக்கங்கள் முடிவுற்ற நிலை).

4ம் எதிராளி சாட்சியளிக்க தவணை இடப்பட்டு மீண்டும் 4ம் எதிராளிக்கு சுகயீனம் காரணமாக தவணை கோரப்பட்டுள்ளது. பின்னர் 3ம் எதிராளி சமூகமளிப்பார் என தவணைகோரப்பட்டு 05.08.2025 தவணையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (07.05.2025 - 02.07.2025)

மேலே குறிப்பிட்ட விடங்களை இன்றையதினம் (05.08.2025) மன்ற கவனத்திற்கெடுத்து எதிராளிகள் தரப்பில் இன்றைய தினம் சாட்சியம் முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த தவணை 4ம் எதிராளி சாட்சியாக அழைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டு அவ்வழக்கை நடாத்த எத்தணிக்கவில்லை என்றும் இத்தவணை 3ம் எதிராளி சாட்சியமளிக்க இருப்பதாகக் குறிப்பிட்டு அவர் வரவில்லை என மன்றிற்கு தெரிவித்திருப்பதும். தெரிந்துகொண்டே மன்றை சிரமத்திற்குள்ளாக்கும் செயலாக மன்று கருதுகின்றது. எனவே எதிராளிகள் தரப்பில் சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை என்றும். முறையற்ற விண்ணப்பங்களை மேற்கொண்டதோடு. குறித்த தினத்தில் மன்றில் தோன்றிவழக்கை மேற்கொண்டு எடுத்துச்செல்ல தவறியுள்ளதால் மன்று குடியியல் நடைமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 145 இன் ஏற்பாடுகளிற்கமைவாக இவ்வழக்கை 05.08.2025 முடிவுறுத்தி 04.05.2026 ம் திகதி வழக்காளிகளான எம் சார்பில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**தீர்ப்பு**

**(அ)** வழங்காளிகள் குறித்த 9 ம் திருவிழாவிற்குரியதும் அதனோடு முன்னுரைத்த ஏனைய உபயங்களையும் இடையூறு இன்றி செய்து வருவதற்கான உரித்துள்ளவர்கள் என்ற விளம்பல்.

**(ஆ)** குறித்த 9 ம் திருவிழா உபயகாரர் குறித்த பழையவர் ஆலயம் தொடர்பில் தமது முன்னுரித்தாளர்களுக்கும். தங்களுக்கும் உள்ள உரித்துக்களை பாதிக்கத்தக்க எவ்வித நடவடிக்கைகளையும் எதிராளிகளோ அவர்களது முகவர்கள். தங்குனர்கள். ஏவலாட்கள் செய்யலாகாது என்ற கட்டளையும் தீர்ப்பும்.

**(இ)** இடித்து அகற்றப்பட்ட "பழையவர் ஆலயத்தை" குறித்த வழக்காளிகள் பிரதி நிதித்துவப்படுத்தும் குருகுல சமூகத்தவர்களே தமது செலவில் மீள நிர்மாணிப்பதற்கான உரித்துடையவர்கள் என்ற விளம்பலும்.

**(ஈ)** குறித்த பழையவர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கான வழங்காளிகளின் உரித்தை எதிராளிகள் தடைசெய்யக்கூடாது என்ற கட்டளையும்.

**(உ)** குறித்த குருகுல சமூகத்தினர் குறித்த பழையவர் ஆலயத்தில் தொன்று தொட்டு செய்துவரும் 9 ம் திருவிழா மற்றும் கந்தஷஷ்டி 5ம் நாளான சிங்கன் போர். மாசிமக தீர்த்த உற்சவம். போன்ற தம்மால் செய்யப்படும் சகல உற்சவங்களையும் தொடர்நது செய்து வருவாத எதிராளிகளோ அவர்களது முகவர்கள் தங்குனர்கள். ஏவலாள் போறை சகலரும் தடை செய்யக்கூடாது என்ற நிரந்தர கட்டளையும்.

மேலே குறிப்பிடப்பட்ட "அ" தொடக்கம்" "உ" வரையான தீர்ப்புக்கள் மன்றினால் எம் சார்பாகவே 04.05.2026 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதை சகல உறுப்பினர்களிற்கும் உறு துணையாகவுள்ள சைவப்பெருமக்களிற்கும் அறியத்தருகிறோம்.

**முக்கிய குறிப்பு** : (1) மேற்படி ஆலயத்தின் மூலாலய கருங்கல் திருப்பணியானது மந்த கதியில் இடம்பெற்றமைக்கும். தடங்கல்களிற்கும் (2018 - 2026-06-18) எம்மால் தாக்கல் செய்யப்பட்ட (TR/18/2019) வழக்கே காரணமாக இருந்ததென பரப்பப்பட்ட வதந்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

(2) குருகுல சமூகத்தவர்களாகிய எம் முன்னோர்களால் கட்டப்பட்டு எம்மால் அவ்வப்போது புனரமைப்புச் செய்யப்பட்டு இருந்ததும் "உடுப்பிட்டிச் சிவசம்புப்புலவரிற்கு" குன்மநோய்நீக்கி (அல்சர்). கண்பார்வை வழங்கிய சிவசம்புப் புலவரின் உபாசனாமூர்த்தி பொலிகண்டிக்கந்தவனம் திருவருள் மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி (நன்றி :- உடுப்பிட்டி சிவசம்புப்புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு - 2014) " நவாலியூர் சோமசுந்தரப் புலவரிற்கும்" குன்மநோய் நீக்கி (அல்சர்) அவர் கந்தவன நாதர் திருப்பள்ளியெழுச்சி பாடியமையும். வரலாறு அனைவரும் வழிபட்டமையும். " இடதுபுற வரமருளும் வரதகரம்" உடைந்திருந்த நிலையிலும் வேண்டிய வரமருளியமை பழையவர் - கந்தப்பெருமான் வரலாறு ( இறை கட்டளையா? ஆகம விதியா மேலோங்குகின்றது).

(3) சித்தர்கள். சைவப்புலவர்கள். சைவப்பேரறிஞரின் கூற்றின்படி "இவ்வாறான வரலாற்றைக் கொண்ட ஆலயத்தினை "எம்மை அகற்ற வேண்டும்" எனக்கருதி " தம்மையே அழித்தமை". திருப்பணி நிதி கோரி விளம்பரம் செய்தமை நிற்க.

**"ஆலயம் இவ்வாறான நிலையில் இருப்பது ஊரிற்கே கூடாது"**

1. கலப்புத் திருமணங்கள் அதிகரிக்கும் (18 ற்கு மேல்... உண்மை)
2. நிதி நீதியை வெல்லும்
3. சிவலிங்க வழிபாடுகள் - சிவ பூசைகள் இல்லாத நிலை ஏற்படும்.
4 உண்மையை நம்ப மறுத்து பொய்யையே பரப்புவார்கள்

(நன்றி :- "தென்னிந்திய சித்தரின் வாக்கு)"

(4) ஆலய கும்பாபிஷேகங்களான அந்தபிதம். அனாவர்த்தனம். ஆவர்த்தனம். புனராவர்த்தனம் இவற்றினுள் எதனைப் பின்பற்றி கும்பாபிஷேகம் இடம்பெறும் என்பதனை முற்கூட்டியே இலங்கை - இந்திய ஆலய ஆகம சாஸ்திர நிபுணர்கள் அறியத்தருக.

**பழையவர் ஆலய திருப்பணியும் இடம்பெற உள்ளதால் 9ம் திருவிழா அங்கத்தவர்கள் அனைவரும் நிதி உதவியளிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.**

| | | |
|---|---|---|
| **நடராசா இளஞ்சந்திரன்** (தலைவர்) | **சுப்பிரமணியம் ராங்கநாதன்** (செயலாளர்) | **நவரத்தினம் தங்கவேலாயுதம்** (பொருளாளர்) |

(cs 32006) N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

THE HALO TRUST

# Job Description – Procurement officer
# The HALO Trust – Sri Lanka

**Job Title: Procurement officer.**
**Location: Sri Lanka – Mullaitivu**
**Reporting To: Deputy Programme Manager**

**Main Description**

The Procurement officer is responsible for overseeing all procurement and distribution processes across HALO's Sri Lanka programme, contributing to the smooth and effective cooperation between mine clearance operations and support departments. Procurement officer will manage a team of Procurement assistants and Database assistant based in Kilinochchi and Jaffna offices, work closely with HALO's support staff in Colombo and serve as point of contact for HALO's global logistics team based in the UK and he International Fleet & Logistics Manager based in Kilinochchi. The Procurement officer reports directly to the International Fleet & Logistics Manager and in coordination with the finance team.

**Key Responsibilities**

- Strategically plan and manage procurement, warehouse, transportation and staff services
- Direct, optimise and coordinate full order cycle.
- Liaise and negotiate with suppliers, manufacturers, retailers and relevant staff. Keep track of quality, quantity, stock levels, delivery times, transport costs and efficiency
- Manage purchase requirements, placing of orders and delivery of items in a timely manner.
- Manage Procurement assistants from all locations to source good quality items for the best price and analyse the quotations.
- Maintain metrics and analyse data to assess performance and implement improvements.
- Understand, follow and implement all of HALO's policies relevant to procurement in particular the anti-bribery, anti-corruption, whistle blowing and relevant sections of the finance policy, in cooperation with HQ Logistics and other relevant staff.
- Mentor and supervise Data Entry Officers & Procurement assistants and maintain daily oversight of the procurement database, including following up on pending purchases.
- Supervise, coach and train storekeepers as required.
- Daily collaboration with other departments, especially demining stores, and workshop to ensure that stock levels are in order and to project the needs of various departments up to six months ahead.
- Monitor the capital equipment list which is maintained by the Data Entry Officers (in collaboration with the Fleet Manager, Workshop Manager & Logistics Manager)
- Plan international procurement with HQ Logistics through smart sheet.
- Coordinate international procurement with Colombo office for importation procedures and other legislative requirements.
- Provide procurement support to Deputy Programme Manager, Finance Manager, HR Manager, Logistics Manager, Technician, Fleet Manager, Workshop Manager, Spare Parts Storeman, Head Driver, and international staff as required.
- Plan a store check as needed and a 100% check of capital equipment every year.
- Develop a capital equipment purchase plan with the International Fleet & Logistics Manager.
- Provide support to the International Finance manager (IFM) & Finance manager for audit requirements in procurement.
- Evaluate budgets and expenditures with IFM & Finance Manager
- Provide procurement assistants with daily expense information and coordinate with the finance team.
- Ensure daily procurement activity is reviewed in all locations and procure ment & service provision is finalised.
- Ensure that vehicle rental service agreements and other service agreements are prepared and completed according to HALO's global procurement policy.
- Any other duties as requested.

**Role Requirements**

**Essential**

- Sri Lanka citizen
- Fluent spoken and written Tamil/Sinhala.
- Excellent spoken and written English.
- Significant experience in procurement and tender processes, preferably in an (I)NGO setting
- Experience in leading a team.
- Strong IT skills
- Strong numeracy skills and data analysis skills
- Excellent interpersonal and analytical skills with meticulous attention to details.
- Ability to work effectively in a team in a culturally diverse environment.
- Ability to work well under stress and in a fast-paced environment.
- Excellent time management skills and ability to multi-task and prioritise work.
- Strong organisational, planning, and problem-solving skills.
- Commitment to HALO's Values and Standards at all times, in and out of work.
- Commitment to HALO's Global and National Policies, including Safeguarding & Whistleblowing

**Desirable**

- University degree in supply chain, logistics, business management or related field.
- Previous (I)NGO work experience
- Experience in humanitarian Mine Action.

Interested candidates must submit their CV (2 pages maximum) and a cover letter (one page maximum) to the address below or by email. In addition, CVs must include at least two professional references. Shortlisted candidate will be invited to interview.

All applications must be submitted to the address below no later than **June 26, 2026, either by Post or via email below.** "If there is a sufficient caliber of applicants, we reserve the right to close the role earlier than the date noted." Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

HR Manager
The HALO Trust,
450 Thirunagar West, Kilinochchi
hr@halosrilanka.org

(27709) J-1

# பொதுக்கூட்டம்

## பெயர்மாற்றம்

சரசாலை தெற்கு சாவகச்சேரியை சேர்ந்த தவநேசன் புவிந்தன் ஆகிய நான் எனது பெயரை மொஹமட் அயான் என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் மொஹமட் அயான் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

மொஹமட் அயான்

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் - 2026 / 2027

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை 21.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. ஆகவே அனைத்து அங்கத்தவர்களும் உரிய நேரத்திற்கு வருகைதந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

- இணைச் செயலாளர்

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், கொழும்பு, கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் வவுனியா நகரில் அமைந்துள்ள PPT நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

குறிப்பு: கிளிநொச்சி, வவுனியா பிரதேசங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்
- காசாளர்

(உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.)

**தொடர்பு:077 386 6250**

(CS 61698) J-1



உ

யாழ். உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் ஆலய

## மகோற்சவப் பெருவிழா

பராபவ வருட மகோற்சவப் பெருவிழா
இன்று (20.06.2026) சனிக்கிழமை காலை
சுப வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி
தொடர்ந்து 10 தினங்கள் பக்தி பூர்வமாக நடைபெற
திருவருள் கூடியுள்ளது.

இத் தினங்களில் அனைத்து பக்த அடியார்களும் விழாக்காலங்களில் கலந்துகொண்டு இன்மையில் பெரும் பயன் அடையும்மாறு வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 590 8538

ஆதீன கர்த்தா
சிவஸ்ரீ வெ.சுப்பிரமணிய குருக்கள்

(ct-47695) N

யாழ்., ஜூன் 20

சண்டிலிப்பாய்இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம், நாளை 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கல்லூரி நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் வ. நந்தீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்தில், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

(அ 63)

## வட இலங்கைச் சங்கீத சபை - யாழ்ப்பாணம்
## 27ஆவது "கலாவித்தகர்" பட்டமளிப்பு விழா

திகதி : 20.06.2026 – சனிக்கிழமை நேரம் : பி.ப 3.00 மணி
இடம் : வட இலங்கைச் சங்கீத சபை மண்டபம், மருதனார்மடம்.

**தலைவர்**

திருமதி மாலதி முகுந்தன்
தலைவர் – வட. இலங்கைச் சங்கீத சபை
வலயக் கல்விப் பணிப்பாளர்
யாழ். கல்வி வலயம்

**பிரதம விருந்தினர்**

உயர்திரு ம. பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடக்கு மாகாணம்

**சிறப்பு விருந்தினர்**

உயர்திரு யோ. ஜெயச்சந்திரன்
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

**கௌரவ விருந்தினர்கள்**

கலாநிதி ஆனந்தஜோதி சண்முகநாதன்
நடனத்துறைத் தலைவர்
சேர் பொன். இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சங்கீதபூஷணம், கலாபூஷணம் தம்பு சரோஜா
ஓய்வுநிலை அழகியல் உதவிக்கல்விப் பணிப்பாளர்

கலாபூஷணம் யசோதா விவேகானந்தன்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்

இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வட. இலங்கைச் சங்கீத சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மரண அறிவித்தல்

மலர்வு

12 . 10 . 1959



உதிர்வு

18 . 06 . 2026

(CS/61695) J-1

## சின்னத்துரை கேதீஸ்வரராசா (ஈசன்)

**(உரிமையாளர் M.S.K Communication & Book Stall திருகோணமலை)**

நெடுந்தீவு மேற்கை (2ம் வட்டாரம்) பிறப்பிடமாகவும், கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கேதீஸ்வரராசா அவர்கள் கடந்த (18.06.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளியம்மை தம்பதியரின் புதல்வனும், சுப்பிரமணியம் - மற்றும் காலஞ்சென்ற தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், ரதிகலா அவர்களின் கணவரும், ஆதவன், ஆரணி, ஆர்த்திகா, காலஞ்சென்ற ஆருண்யா மற்றும் ஆருஜா ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் புவனராஜேஸ்வரி, நகுலராஜேஸ்வரி, குருபரராஜா, பாலராஜேஸ்வரி, மங்களராஜேஸ்வரி, சக்தீஸ்வரராஜா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், உமாசரன், விஜயகுமாரன் மற்றும் துஷ்யந்தினி, நித்தியராசா, கருணானந்தன், சாந்தினி, ஸ்ரீகாந்தன், வரதன், சந்திரபாலன், முருகதாஸ், திலகவதி, முரளிதாஸ் ஆகியோரின் மைத்துனரும், பிரசன்னா, காலஞ்சென்ற பிரசாத், மற்றும் பிரதாப், பிரதீப், சோபிகா, சஜந், அஜந், பிரிஜந், சாயிவீனா, ஜானுகா, ஜனார்த்தன், பிரணவி, அம்பிகா, சஞ்சய், அதுஷ்தன், அதுஷ்னா, அனுஷ்டினா, சுஜானி, சுபானி, சுபேனி, சந்தியா, சர்யுன், சாயினா ஆகியோரின் மாமாவும், மகிழ்ருதன், சானவி, பிரவீனா, ஹரீசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: குடும்பத்தினர்**

**14A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**077 315 1298**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ்ப்பாணம் மாநகர சபை

பண்ணை கடற்கரைப்பூங்கா மற்றும் ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் என்பவற்றிற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை பொழுதுபோக்கு மற்றும் உணவக சேவை 2026

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | |
|---|---|
| கேள்விப் படிவக் கட்டணம் | :- ரூபா 1,180.00 (வற் வரியுடன்) |
| கேள்விப் படிவம் விநியோகித்தல் | :- 22.06.2026 - 06.07.2026 (மு.ப 9.00 - பி.ப.2.30 மணி வரை) |
| கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் | :- 07.07.2026 மு.ப 10.00 மணி வரை |
| கேள்வி திறத்தல் | :- 07.07.2026.மு.ப 10.05 மணிக்கு |

தகுதிகள்

1. பொழுதுபோக்கு சேவை மற்றும் உணவக சேவை அனுபவம் கொண்டவர்கள்
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர்
3. சுகாதார விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல்

நிபந்தனைகள்

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 07.07.2026 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக, நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதியற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

| இல | விபரம் | குத்தகைக் காலம் | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணைக் கடற்கரைப் பூங்கா | 01.08.2026 - 31.12.2028 | 100,000.00 | 5,595,791.66 |
| 2 | ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் | 01.08.2026 - 31.12.2028 | 10,000.00 | 584,833.33 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 4.15 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# வேலைவாய்ப்பு

எமது வெளியீடு ஒன்றிற்கு
Computer Typist
தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம்
வழங்கப்படும்.

**077 711 1212**

(CS/N 61680)

# யாழ் மாநகர சபை - பகிரங்க ஏலம் கோரல்

காக்கைதீவு மீள்சுழற்சி மையத்திலுள்ள பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

**காலம்:** 2026 ம் ஆண்டு யூலை மாதத்தில் இருந்து ஒவ்வொருமாதமும் மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளில் காலை மு.ப 9.30 தொடக்கம் மு.ப 11.30 மணிவரை.

**இடம்:** காக்கை தீவு மீள்சுழற்சி மையம், காரைநகர் வீதி காக்கைதீவு.

பொருட்கள்:
1. பொலித்தீன் 2. வர்ணப்பொலித்தீன்
3.வெற்றுப்போத்தல் 4. துணிகள்
5. கட்டுக்களாக கட்டப்பட்டதுணி 6. ரயர்
7. காலணிகள் 8. துருப்பிடிக்காத இரும்பு
9. தகரம் 10.கண்ணாடி

மாநகர முதல்வர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(CR/47714) J-1



# உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் கோயில்
# பராபவ வருஷ மஹோற்சவம் - 2026

**சித்தி விநாயகர்
சித்தம் தெளிவிப்பார்
புத்தி பலம் பெற புண்ணியம் தேடுவோம்
சுத்தியுடன் வந்து சுந்தரனைக்காண
முத்தி உறுதியென முழுமையாய் நம்புவோம்!!**

## உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் மஹோற்சவ விஞ்ஞாபனம்

அன்புடையீர்,

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ பராபவ வருடம் ஆனி மாதம் 6ம் நாள் (20.06.2026)சனிக்கிழமை உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் வருடாந்த மஹோற்சவம் புதிய நிர்வாகத்தின் கீழ் நடை பெறத்திருவருள் கூடியுள்ளது. சங்கர உடையாரால் ஆரம்பிக்கப்பட்ட மடாலயம் பின்னர் உடுவில் சிவசாமி நாகமுத்துக்குருக்களிடம் முழு பொறுப்புக்களும் கையளிக்கப்பட்டு அதன்பின் நாகமுத்துக் குருக்கள் மகன் வாஞ்சீஸ்வரக் குருக்கள் பின்னர் அவர் பிள்ளைகள் சர்வேஸ்வர சர்மா, பாலசுப்ரமணியக் குருக்கள், முத்துக்குமாரசாமி சர்மாவினால் வளர்த்து எடுக்கப்பட்டு உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்டையார் உடுவையம்பதி அடியார்களின் பெரு முயற்சியால் ஆகம விதிப்படி எம் பெருமானுக்கு 1982ம் ஆண்டு புனருர்த்தாரணம் செய்யப்பட்டு விநாயகர் அருள் பாலித்து வருகிறார். எனினும் நாட்டு சூழ்நிலை, வயோதிபம் காரணமாக முத்துக்குமாரசாமி சர்மா, சரவேஸ்வர சர்மா, பாலசுப்ரமணியக் குருக்களால் கோயில் பாராமரிப்பைத் தொடர முடியாத காரணத்தினால் பாலசுப்ரமணியக் குருக்கள் மகளின் கணவர் ஸ்ரீ வெங்கடசுப்ரமணிய குருக்கள் அர்ச்சகராக செயல்பட்டு பின் அந்தக் கடமையைத் தம்மால் தொடர முடியாது என்று சென்றபின் 04.02.2026 முதல் ஆலயம் ஒரு மாதத்திற்கும் மேலாக பூட்டப்பட்டதுடன் தன்னால் அதனைத் தொடரமுடியாது என உதயன் பத்திரிகை மூலமும் அறிவித்ததைத் தொடர்ந்து முத்துக்குமாரசாமி சர்மா ஜனார்த்தன சர்மா உதவி அரசாங்க அதிபரைத் தொடர்பு கொண்டு உரிமை உறுதிப்படுத்தப்பட்டு 05.03.2026 கோவில் திறப்பு மீளப் பெறப்பட்டது முதல் நித்திய பூஜை, திருவிழாக்கள், உபயகாரர்கள், பிள்ளையார் அடியார்கள் பங்களிப்புடன் நடைபெற்றுவருகிறது. அதன் தொடர்ச்சியாக 20.06.2026 ஆரம்பமாகும் பராபவ -2026 ஆலய மஹோற்சவ திருவிழாக் காலங்களில் நடைபெறும் கிரியைகள், தீபாராதனை ஏனைய வழிபாடுகளில் குடும்ப சமேதராக வந்து பங்கேற்று உங்களுக்கும் உலக மக்களுக்கும் ஆனந்தப் பெருவாழ்வு கிட்ட பிரார்த்திப்போமாக.

லோகாசமஸ்தா சுகினோபவந்து
சமஸ்தா சன் மங்களாணிபவந்து
சர்வேஜனாசுகினோபவந்து

*சிவநேயச் சீலர்களே!!*

**வேழ முகத்து விநாயகரைதொழ வாழ்வு மிகுந்து வந்ததினாலே உடுவில் எனும் பதியில் அமர்ந்து நினைந்துருகி வழிபடும் அடியவர் துயர் நீக்கி அருள் புரிந்து வரும் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையாரின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா. நிகழும் மங்களகரமான பராபவ வருஷம் ஆனி மாதம் 6 ம் நாள் (20.06.2026) சனிக்கிழமை தொடக்கம் ஆனி மாதம் 15 ஆம் நாள் (29.06.2026) திங்கட்கிழமை வரை வெகு சிறப்பாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.**

**அந்நேரத்திலும் அதன் முன் பின் நடைபெறும் கிரியா காலங்களிலும் கலந்து சிறப்பித்து திருவருள் பெற்று கிராமம் மாவட்டம் மட்டுமன்றி, உலக மக்கள் அனைவரும் சாந்தி சமாதானத்துடன் பேரருள் பெற்று சீரும் சிறப்பும் மிக்க ஆனந்தப் பெருவாழ்வு வாழப் பிரார்த்திக்கவும்.**

## உபயகாரர்கள்

| திருவிழா | | உபயம் | விநாயகர் புறப்பாடு |
|---|---|---|---|
| ◆ 01 ஆம் | திருவிழா | மயில்வாகனம் கணேசம்மா குடும்பம் | எலி / மயில் |
| ◆ 02 ஆம் | திருவிழா | வைரமுத்து குடும்பம் | ரிஷபம் |
| ◆ 03 ஆம் | திருவிழா | தயானந்தம் குடும்பம் | யானை |
| ◆ 04 ஆம் | திருவிழா | VKV வசி குடும்பம் | ரிஷபம் |
| ◆ 05 ஆம் | திருவிழா | சேகராஜசேகரம் குடும்பம் | மஞ்சம் |
| ◆ 06 ஆம் | திருவிழா | ரவிச்சகரவர்த்தி குடும்பம் | எலி |
| ◆ 07 ஆம் | திருவிழா | லக்கி செல்லையா குடும்பம் | குதிரை |
| ◆ 08 ஆம் | திருவிழா | தம்பிராசா குடும்பம் | சப்பறம் |
| ◆ 09 ஆம் | திருவிழா | தேவரட்ணம் சர்மிலன் குடும்பம் | தேர் |
| ◆ 10 ஆம் | திருவிழா | பஞ்சநாதன் ராகுலன் குடும்பம்/ கோயில் உபயம் | யானை / மயில் |
| ◆ 11.ஆம் | திருவிழா | பொது | திருக்கல்யாணம் |

**03.07.2026 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு வைரவர் மடை**

◆ 20.06.2026 - சனிக்கிழமை - காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடு மூலமூர்த்தி அபிஷேகம் பூஜைகள் தொடர்ந்து பகல் 10.30 மணிக்கு துவஜாரோகணம் இடம்பெற்று பகல் உற்சவம் நிகழும்.

◆ 21.06.2026 - ஞாயிற்றுக்கிழமை- விநாயகர் வழிபாடு மூல மூர்த்தி அபிஷேகம், நடேசர் அபிஷேகம் மற்றும் விசேஷ பூஜைகள் நடைபெறும்.

◆ 27.06.2026 - சனிக்கிழமை - மாலை 4.00 மணிக்கு வேட்டைத்திருவிழா

◆ 28.06.2026 - ஞாயிற்றுக்கிழமை- காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி அபிஷேகம் பூஜைகள் தொடர்ந்து விநாயகர் பெருமான் பகல் 10.00 மணிக்கு ரதத்தில் ஆரோகணிப்பார். தொடர்ந்து ரத அவரோகணம் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

◆ 29.06.2026 - திங்கட்கிழமை - காலை 7.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து தீர்த்தவாரியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். மாலை திருவூஞ்சல் துவஜஅவரோகணம், சண்டேஸ்வரர் உற்வம், சிவாச்சாரியார் உற்சவம்

**முத்துக்குமாரசாமி சர்மா ஜனார்த்தன சர்மா ஆதீனகர்த்தா**

**பரிபாலகர்கள்:**
**மகேஸ்வர சர்மா, ஜெகதீஸ்வர சர்மா, ஸ்ரீதரக் குருக்கள், கேசவ சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிளிநொச்சி...

டல் சிகிச்சை(ஐ.வி.எப்.) உத்தியோகபூர்வமாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வடக்கு மாகாண விசேட பெண்நோயியல் மருத்துவமனையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடமும் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையும் இணைந்து, கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் பங்களிப்புடன் இந்தச்சிகிச்சைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளன.

திருமணத்தின் பின்னர் நீண்ட நாட்களாகக் குழந்தைகள் இன்றித் தவிக்கும் தம்பதியினரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் இன்றைய சூழலில், பல இலட்சம் ரூபா செலவினத்தைக் கொண்ட இந்த அதிநவீன சிகிச்சை முறை கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை வடக்கு மாகாண மக்களுக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது.

அந்த வகையில், முதற்கட்டமாக உடல் மற்றும் உள ரீதியான பல்வேறு மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுத் தகுதிபெற்ற நான்கு பெண்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு முற்றிலும் இலவசமாக இந்தச்சிகிச்சை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் அரசமருத்துவமனைக் கட்டமைப்பில் தற்போது கிளிநொச்சி மாவட்ட அரச மருத்துவமனையில் மட்டுமே இந்தச்சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க ஆரம்ப நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்தின் பீடாதிபதி, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் பிரதிச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளர், விசேட மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் தலைவர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.(அ)

## அர்ச்சுனா...

பினர் அர்ச்சுனாவுக்கு நீதிமன்றம் வாய்ப்பூட்டு போட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் மருத்துவர் ஜெயக்குமார் ஆகியோருக்கு எதிராகத் தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு பெண் மருத்துவரால், நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை கட்டளை பிறப்பித்துள்ளது.

தன்னைத் தொந்தரவு செய்யும் வகையிலும், தனது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையிலும் சமூக வலைத்தளங்கள் வாயிலாக அவதூறுகளைப் பரப்புகின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் மருத்துவர் ஜெயக்குமார் ஆகியோருக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட பெண் மருத்துவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, கட்டளை பிறப்பிப்பதற்காக நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நஜ்மி ஹுசைன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, முதலாவது எதிர்த்தரப்பு வாதியான மருத்துவர் ஜெயக்குமார் வெளியிட்ட கருத்துகள் தவறானவை அல்ல என நீதிமன்றம் கருதியதால், அவர் வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கப் பட்டார்.

எனினும், இரண்டாவது எதிர்த்தரப்புவாதியான மருத்துவர் அர்ச்சுனா தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, 'அவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் அவருக்குப் பேச்சுச் சுதந்திரம் உள்ளது' என முன்வைத்த வாதத்தை நீதிவான் வன்மையாக நிராகரித்தார். நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் அல்லது சாதாரண குடிமகனாக இருந்தாலும் பேச்சுச் சுதந்திரத்துக்கு என்று வரையறுக்கப்பட்ட எல்லை உண்டு என நீதிவான் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எந்தவொரு முறையான சான்றுகளும் இன்றி, ஒரு மருத்துவ அதிகாரியின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தோ அல்லது அவர் ஊழல் புரிந்தார் என்றோ அவதூறு பரப்புவதற்கு எவருக்கும் உரிமை இல்லை என்றும் நீதிவான் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், பாதிக்கப்பட்ட பெண் மருத்துவருக்கு எதிராக இனி எவ்விதமான அவதூறு மற்றும் போலிப் பரப்புரைகளையும் சமூக ஊடகங்களிலோ அல்லது பொதுவெளியிலோ முன்னெடுக்கக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு நீதிவான் வாய்ப்பூட்டு உத்தரவு பிறப்பித்தார். அத்துடன், அவருக்கு எதிராக இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து அவதூறான மற்றும் போலிப் பிரசாரக் காணொலிகளையும் சமூக வலைத்தளங்களிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் என்றும் நீதிவான் கட்டளையிட்டார்.

குறித்த வழக்கில் வழக்குத்தொடுநர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி லக்சான் டயஸின் வழிகாட்டலில் சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனாவும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் சட்டத்தரணி கௌசல்யா நரேந்திரனும் முன்னிலையாகியிருந்தனர்.

இதேவேளை, இலங்கையில் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ், தீர்ப்பளிக்கப்பட்ட இரண்டாவது விசேட வழக்கு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26)

## நாகர்கோவில்...

கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அந்தப்பகுதியில் வீசி வரும் பலத்த காற்று காரணமாகத் தீ கொழுந்துவிட்டு எரிந்து வருவதுடன், தீப்பரவல் ஏனைய காட்டுப் பகுதிகளுக்கும் வேகமாகப் பரவும் அபாய நிலை காணப்பட்டது. இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை குறித்த தீப்பரவல் கட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-100)

## மதவாச்சி...

புயல் காரணமாகத் தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரையான புகையிரதப் பாதையின் பல பகுதிகள் கடுமையாகப் பாதிப்படைந்திருந்தன. இதன் காரணமாக, தலைமன்னாரிலிருந்து கொழும்புக்கான நேரடிப் புகையிரதச் சேவைகள் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக முற்றாக நிறுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட புகையிரதப் பாதைகளைப் புனரமைத்து, தலைமன்னாரிலிருந்து கொழும்பு வரையிலான சேவைகளை மீண்டும் வழமைக்குக் கொண்டுவர இலங்கை புகையிரதத் திணைக்களம் அண்மையில் நடவடிக்கை எடுத்திருந்தது.

அதற்கமைய, முதற்கட்டமாக நேற்று மதியம் மதவாச்சியிலிருந்து தலைமன்னார் வரை புகையிரதத்தை இயக்கி இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தப்பரிசோதனை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளதால், இன்னும் சில தினங்களில் தலைமன்னாரிலிருந்து கொழும்புக்கான நேரடிப் புகையிரதச் சேவைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-56)


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சிவசுப்பிரமணியம் தவசீலன்



எமது கோயிலில் நீண்டகாலமாக மஹோற்சவம் மற்றும் சங்காபிஷேகம் ஆகியவற்றில் தனக்குரிய கடமைகளை மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்து ஆலய செயற்பாடுகளுக்கு பெரும் உறுதுணையாக செயற்பட்டு வந்த அமரர் சிவசுப்பிரமணியம் தவசீலன் அவர்கள் கடந்த 16.06.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**நம்பிக்கைப் பொறுப்பாளர் பரிபாலன சபை, கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் முதலாய கோயில்கள்.**

தோற்றம் 01.05.1978 — மறைவு 16.06.2026

(CS/61700) J-1


## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

### பளைநகர பேருந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல BUS - 05 நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல் - 2026

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 22.06.2026 தொடக்கம் 05.07.2026 வரை (அலுவலக நேரம் )
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 06.07.2026 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.07.2026 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 1,032,000.00 | 15,500.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 06.07.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06 நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக் கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.

20.06.2026.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரசியலமைப்பை...

அத்துடன், சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவுபெற்று, தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலின்போதே பிரதமர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"அரசியலமைப்பு மறுசீரமைப்பை மேற்கொள்வதைவிட, முற்றிலும் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதே எமது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்த வாக்குறுதியை மக்களுக்கு வழங்கியிருந்தோம்.

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படவேண்டும் என்ற விடயத்தில் நாம் இன்றும் உறுதியாகவே உள்ளோம். அது குறித்த முதற்கட்டப் பேச்சுகளும், ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அந்த விடயத்திற்குத் தற்போது முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை நாம் மறைக்காமல் ஏற்கின்றோம்.

ஏனெனில், தற்போதைய சூழலில் நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றுக்கே நாம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம். எனினும், பயங்கரவாதத் தடைச்சட்டம் இந்த வருடத்திற்குள் நிச்சயம் நீக்கப்படும். அதற்குரிய சகல சட்ட ஏற்பாடுகளும் நிறைவடைந்துவிட்டன. விரைவில் அது தொடர்பான யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதானது, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். மக்கள் அனுமதியுடன் (சர்வஜன வாக்கெடுப்பு மூலம்) புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும். எமது ஆட்சிக்கு இன்னும் மூன்று வருடங்கள் முழுமையாக உள்ளன. இந்த காலப்பகுதி அதற்குப் போதுமானது. அதற்குப் பிறகும் மக்கள் எமக்கே மீண்டும் ஆட்சியாணையை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது" என்று பிரதமர் தெரிவித்தார். (அ-இ)

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
பிரிவு - 69
✲ Diploma in English / Spoken English
✲ Diploma in ICT / AI
✲ Diploma in Psychology & Counseling
✲ Diploma in Teaching practice
✲ Diploma in Political Science
• காலம்: 03 மாதங்கள் • அரச அங்கீகாரமுடைய சான்றிதழ்
ஆரம்பம் : 27/28-06-2026
IPS to your future
Thirunelvely,Jaffna.
TP:074 079 3360

## மீட்கப்பட்ட...

செம்மணிப் புதைகுழியின் அகழ்வுப் பணிகளை நேற்றுமாலை பார்வையிட்ட நீதியமைச்சரிடம், 'செம்மணிப்புதைகுழி 1999 இல் அகழப்பட்ட போது மீட்கப்பட்ட 15 என்புக்கூடுகள் மேலதிக பரிசோதனைக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டன. சில சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டு வழக்கும் தொடரப்பட்டது. அந்த என்புக்கூடுகளின் பரிசோதனை முடிவுகள் எங்கே? குறித்த வழக்கு என்ன நிலையில் உள்ளது?'என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார். அதற்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

'நீங்கள் சொல்லும் வழக்கைப் பற்றியோ, வெளிநாட்டுக்காக அனுப்பப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றியோ எம்மிடம் எவ்விதமான தகவல்களோ ஆவணங்களோ தற்போது இல்லை. அதுபற்றி எதிர்வரும் நாள்களில் தீவிர கவனம் செலுத்தி அந்த என்புக்கூடுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிய முயற்சிப்போம். முன்னைய அரசாங்கங்கள் போல நாங்கள் அநீதியாகச் செயற்படமாட்டோம். செம்மணிப் புதைகுழி தொடர்பான உண்மைகளை நாங்கள் நிச்சயமாக வெளிகொண்டுவருவோம் எமது அரசாங்கம் வந்தபின்னர் எந்தவிதமான தலையீடுமின்றி, செம்மணிப் புதைகுழி அகழப்பட்டு வருகின்றது. இதில் எவ்வித ஒளிப்பு மறைப்பையும் செய்யவேண்டிய அவசியமில்லை. அடுத்தகட்ட அகழ்வுப் பணிகள், அகழ்வின் போது மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் மீதான டி.என்.ஏ. பரிசோதனை என்பவற்றுக்கான முழுமையான நிதியை விரைவில் விடுவிக்கவுள்ளோம். செம்மணிப்புதைகுழிதொடர்பான ஆதாரங்களோடு எமக்கு தகவல் தந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க நாம் தயாராகவே இருக்கின்றோம் என்று நீதியமைச்சர் தெரிவித்தார். (அ-26)

## நீதி...

மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார, செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியைப் பார்வையிட நேற்று மாலை அந்தப் பகுதிக்கு வந்திருந்தார். அப்போதே நீதியமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

முன்னதாக, குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெறப்போவதை அறிந்த பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கப் பிரதிநிதிகள், சில அரசியல் தலைவர்கள், சில மதத்தலைவர்கள் என்போர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்வதற்கு எதிராக நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றிருந்தனர்.

இந்த நீதிமன்றத் தடையுத்தரவை அடுத்துப் பாதுகாப்புப் பணியில் பெருமளவிலான பொலிஸார் செம்மணிப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும், சகல அச்சுறுத்தல்களையும் கடந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் நேற்றைய போராட்டத்தில் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டிருந்தனர். போராட்டத்துக்கு மத்தியிலும், நீதியமைச்சர் செம்மணியைப் பார்வையிட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26-66)

## 3 மனித...

எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 29ஆம் நாள் பணிகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய, இதுவரை முன்னெடுக்கப்பட்ட ஒட்டுமொத்த அகழ்வுப் பணிகளின் போது, மொத்தம் 394 மனித எலும்புக்கூடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 370 எலும்புக்கூடுகள் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்றைய தினம் நீதியமைச்சர் உள்ளிட்ட விசேட தூதுக்குழுவினரும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழுவினரும் செம்மணிப்பகுதிக்கு நேரில் விஜயம் செய்து, புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-26)

## வீதியைக்...

ழந்துள்ளார். அச்சுவேலி, பாரதி வீதியைச் சேர்ந்த சனுஜன் (வயது -22) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார் .

தனது சாரதிப் பயிற்சியை நிறைவு செய்துகொண்டு, வாகனத்திலிருந்து இறங்கி வீதியின் மறுபக்கத்திற்குச் செல்ல குறித்த இளைஞர் முயன்றபோது, எதிரே அதிவேகமாக வந்த மீன் ஏற்றிச் செல்லும் வாகனம் ஒன்று கண்ணிமைக்கும் நேரத்தில் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். உயிரிழந்த இளைஞரின் சடலம் மேலதிக விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன், உடற்கூறாய்வுப் பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-23)

முதலாம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம் 20 . 04 . 1956



மறைவு 01 . 07 . 2025

கடந்த 01.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
அமரர் மகாலட்சுமி மாரிமுத்து
(இளைப்பாறிய ஆசிரியை தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை தாவடி சாயி ஆங்கில பாடசாலை, மானிப்பாய்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (20.06.2026) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆண்டொன்று போனதம்மா அகலவில்லை உன் பாசம்
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் அறாதம்மா உன் பாசம்
நினைவுகள் நித்தம், நித்தம் வந்து கண்களை நனைக்கின்றது
மனம் உங்களைத் தேடுகின்றது
கதவோரம் உன் நிழல் ஆடுவதுபோல் தெரிகிறதம்மா
உன் குரலோசை வீடு முழுக்க ஒலிக்கிறதம்மா
நீங்கள் இல்லாத வீடு வெறுவீடாய் போனதம்மா
உன் நினைவோடுதான் இனி எங்கள் வாழ்க்கையம்மா
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

(CS/61701) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு சாவகச்சேரி நுணாவில் பொலிஸ் நிலையம், A9 வீதிக்கு அருகாமையில் வீரபத்திரர் வீதியில் 6 பரப்பு 6 குளியும் கொண்ட வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

Tel :- 076 485 8020
WhatsApp:- +94 777 360 995

(CS/61690) J-1



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலை கிழக்கில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன்
- இருபாலை சீ.சீ.தமிழ்கலவன் பாடசாலை அருகாமையில் 200m தூரம்.
- யாழ் பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து 1 Km தூரம் (இருபாலை சந்தி) யாழ் நகரம் 6 Km தூரம்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி, வீடுகள் கட்ட உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி துண்டுகள் பத்து இலட்சம் முதல் பின் பகுதி துண்டுகள் ஆறு இலட்சம் ரூபாய் வரை.

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-

077 988 6389, 076 077 2674, 077 288 0152

CS/32013) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 01 . 1953

மறைவு 18 . 06 . 2026

### Dr. மகேஸ்வரிதேவி சரவணமுத்து (மணி)

**(ஓய்வுபெற்ற கண் வைத்தியர் - யாழ் போதனா வைத்தியசாலை)**

மட்டுவிலை சேர்ந்த Dr. மகேஸ்வரிதேவி சரவணமுத்து (மணி) அவர்கள் கடந்த (18.06.2026) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வுநிலை ஆசிரியர் - சாஸ்திரியார் சரவணமுத்து - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகளும், மங்களாதேவியின் சகோதரியும், சிவப்பிரகாசம் அவர்களின் மைத்துனியும், Dr. சி.யதுகுலன் (விரிவுரையாளர் - மருத்துவபீடம் யாழ் பல்கலைக் கழகம்), விஸ்ணுகா (உதவித் தபாலதிபர்) ஆகியோரின் பெரியதாயாரும், சம்யுத்தா, லவசாந் (பொறியியலாளர் - மலேசியா) ஆகியோரின் மாமியாரும், அகன்ஜன், ஆதிரி, தேஜாஸ்ரீ ஆகியோரின் பேர்த்தியும், மாலினி (ஆசிரியர்), திருமகள் (ஓய்வுநிலை ஆசிரியர்), ஸ்ரீரங்கன் (லண்டன்), ஸ்ரீகாந்தன் (கொழும்பு), கலாநிதி - ச.க. கண்ணதாஸ் (விரிவுரையாளர், யாழ் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அத்தையும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.06.2026) ஞாயிற்றுக் கிழமை காலை 08.00 மணியளவில் பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/32012) J-1

### நெடுந்தீவு...

11ஆம் திகதி நெடுந்தீவுப் பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்றிருந்த வேளையில் காணாமல் போயிருந்தார். அவர் மீண்டும் கரைக்குத் திரும்பாததை அடுத்து, உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. இதன்பின்னர் பொலிஸார் மற்றும் கடற்படையினரின் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்நிலையில், நேற்று அவரது சடலம் இந்தியாவின் தமிழகக் கடற்பரப்பான நாகபட்டினம் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகப் பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு, உரிய சட்ட விசாரணைகள் மற்றும் உடற்கூறாய்வுப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பின்னர், அன்னாரின் உடலை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கான தூதரக அளவிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-27)

### சா/த பெறுபேறு...

பேறுகளை www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### நீதிமன்றுக்கு...

ஆட்கொணர்வு மனு வழக்கில், முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தாபய ராஜபக்ச நிகழ்நிலை மூலம் சாட்சியமளிப்பதாயின், கொழும்பிலுள்ள பிரதான நீதிமன்றம் ஒன்றில் நேரில் முன்னிலையாகி, அங்கிருந்தபடியே சாட்சியமளிக்க வேண்டும் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர், அதற்கு முதல் நாள் ஆவரங்கால் பகுதியில் வைத்து கடத்தப்பட்டு வலிந்து காணாமலாக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து, லலித் மற்றும் குகன் ஆகியோரின் உறவினர்களால் கடந்த 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்தமனுமீதானவிசாரணையின்போது, இக்கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதற்கமைய, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இந்த வழக்கு விசாரணைகளின் தொடர்ச்சியாக, கடந்த 2017ஆம் ஆண்டு மனுதாரர் தரப்பு சாட்சியாளர்கள் பட்டியலில், கடத்தல் சம்பவம் நடந்த காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்த கோத்தாபய ராஜபக்சவின் பெயர் இணைக்கப்பட்டது.

இதனையடுத்து, கோத்தாபயராஜபக்ச நீதிமன்றில் முன்னிலையாகிச் சாட்சியமளிக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், பாதுகாப்பு காரணங்களினால் தன்னால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு நேரில் வர முடியாது என அவர் தரப்பில் தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், தான் நிகழ்நிலை ஊடாகத் தோன்றிச் சாட்சியமளிக்க அனுமதிக்குமாறு கோத்தாபய ராஜபக்ச தனது சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம் வருகை தருவதில் தனக்குள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பான விபரங்களைச் சத்தியக்கடதா மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தது.

கடந்த 2ஆம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது,கோத்தாபய ராஜபக்சவின் சத்தியக்கடதாசியை ஆராய்ந்த நீதிமன்றம், அவர் நிகழ்நிலை ஊடாகத் தோன்றிச் சாட்சியமளிக்க அனுமதி வழங்கியது.

இதன்தொடர்ச்சியாக, நேற்று வெள்ளிக்கிழமை (19) இவ்வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிவான் இந்த விசேட கட்டளையைப் பிறப்பித்தார். கோத்தாபய ராஜபக்சதனது வீட்டிலிருந்தோ அல்லது தனிப்பட்ட இடங்களிலிருந்தோ நிகழ்நிலையில் சாட்சியமளிக்க முடியாது எனவும், கொழும்பிலுள்ள பிரதான நீதிமன்றங்கள் ஒன்றில் நேரில் தோன்றி, அங்குள்ள நீதிவான் முன்னிலையிலேயே நிகழ்நிலை ஊடாகச் சாட்சியமளிக்க வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டது.

அதேவேளை, தான் கொழும்பின் எந்த நீதிமன்றில் முன்னிலையாகவுள்ளார் என்ற விபரத்தையும், அதற்கு ஏதுவான மூன்று சாத்தியமான திகதிகளையும் யாழ்ப்பாணம் நீதிமன்றிற்கு முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் மன்று குறிப்பிடும் திகதியில் கொழும்பு நீதிமன்றில் முன்னிலையாகி நிகழ்நிலை ஊடாகச் சாட்சியமளிக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தனது கட்டளையில் தெளிவுபடுத்தியுள்ளது. (அ-26)


## பணியாளர் வெற்றிடம்

கணனி அறிவுடன் கூடிய கணக்காளர் (HNDA / AAT) (பெண்கள்)

- முன் அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.
- EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்
- நிரந்தரத் தொழில்

சுயவிபரக்கோவையுடன் நேரில் வருகை தரவும்.

ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA

021 222 2564, 021 222 7430

CS/61694) J-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.